**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.138/2013**

Date: 27.02.2024.

**PW-4: ஜெகதீஷ்வரன்**

சாட்சி இன்று மீண்டும் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**A1 to A3, A5, A6, A7, A9, A13, A14 to A18 present. A8 and A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed.**

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் இறந்துபோன நபர்களும், 1 முதல் 3 அரசு தரப்பு சாட்சிகளும் எனது உறவினர்கள் என்ற சங்கதியை சொல்லியிருக்கிறேன். நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ள சங்கதிகளை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் 12-ஆம் வகுப்பு படித்திருக்கிறேன். தற்போது எனக்கு 45 வயதாகிறது. 2008 ஆம் வருடம் நான் பி.எஸ்.என்.எல் நிறுவனத்தில் ஒப்பந்த தொழிலாளராக பணிபுரிந்தேன்.

மேற்படி நிறுவனத்தில் சுமார் 4 வருடங்கள் ஒப்பந்த தொழிலாளராக பணிபுரிந்தேன். சரியாக ஊதியம் கொடுக்கப்படாத காரணத்தினால் அப்பணியிலிருந்து நின்றுகொண்டேன். சிதம்பரத்தில் ஒப்பந்த ஊழியராக பணிபுரிந்தேன். தந்தியை ஒப்படைக்கும் ஊழியராக பணிபுரிந்தேன். சிதம்பரத்தில் 3, 4 இடங்களில் பி.எஸ்.என்.எல் அலுவலகம் இருக்கிறது. அவற்றில் எந்த அலுவலகத்தில் எனக்கு பணி என்றால் எந்த கிளைக்கு போகசொல்லுகிறார்களோ அக்கிளைக்கு போகவேண்டும். குறிப்பாக எந்த கிளை என்று கிடையாது.

என்னை போலிசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தபோது நான் திரும்பி வந்து பார்த்தபோது பிரபு, சுரேஷ், தர்மலிங்கம், மகாலிங்கம், காசிநாதன் ஆகியோர் வெட்டப்பட்டு கிடந்தனர் என்று சொன்னேனா என்றால் அப்படி சொல்லியிருக்கிறேன். மேற்படி நபர்கள் வெட்டப்பட்டு கிடந்ததை தான் நான் பார்த்ததாக சொல்லுகிறேன் என்றாலும், அவர்கள் வெட்டப்பட்டதை நான்

நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. அவர்களை வெட்டியதை நான் நேரில் பார்த்தேன். மேற்படி நபர்கள் வெட்டப்பட்டதை நான் நேரில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும், நீதிமன்றத்தில் தான் முதல்முறையாக அப்படி சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலிசார் விசாரணையிலேயே சொல்லியிருக்கிறேன்.

நான் எனது பணிநிமித்தம் சிதம்பரத்தில் அறை எடுத்து தங்கியிருந்தேனா என்றால் இல்லை. எங்களது ஊரிலிருந்து தான் போய்வந்தேன். வழக்கமாக நான் காலை எத்தனை மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு செல்வேன் என்றால் சம்பவ சமயத்தில் நான் வேலைக்கு போகவில்லை. வேலைக்கு சென்ற சமயத்தில் எத்தனை மணிக்கு புறப்பட்டு செல்வேன் என்றால் பொதுவாக காலை 9.00 மணிக்கு புறப்பட்டு செல்வேன். சிலநாட்களில் சற்றுநேரம் கழித்துகூட செல்வேன்.

நான் தந்தி கம்பங்களை சரிசெய்யும் களப்பணி ஆற்றிவந்தேன் என்றால் சரியல்ல. தந்திகளை விநியோகம் செய்யும் வேலை தான். எனது வீட்டிலிருந்து சிதம்பரத்திற்கு போவதற்கு பேருந்தில் சென்றால் 1 மணிநேரத்தில் போய்விடலாம். மோட்டார் சைக்கிளில் முக்கால்மணி நேரத்தில் போய்விடலாம். எதிரி பாரதிதாசன் எங்கள் ஊருக்கு வந்து தினசரி எதிரிகளை பார்த்து பேசுவார் என்ற சங்கதியை நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். அவர் தினசரி எங்கள் ஊருக்கு வரமாட்டார்.

16.05.2008 அன்று நான் ஊரில் இல்லை என்றாலும், நான் வழக்கமாக செல்வது போன்று காலையிலேயே புறப்பட்டு சிதம்பரத்திற்கு வேலைக்கு போய்விட்டு அன்று இரவு 9.00 மணிக்கு தான் கிராமத்திற்கு திரும்பினேன் என்றாலும் சரியல்ல. அன்றைய தினம் நான் வேலைக்கு போகவில்லை. சம்பவத்தினத்தன்று நான் ஊரில் இல்லை என்றாலும் நான் என்னுடைய முதல்விசாரணையில் சொன்னது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவில்லை என்றாலும், போலிசார் சொல்லிகொடுத்து அதன்அடிப்படையில் முதல்விசாரணை சாட்சியத்தை பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல.

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எப்போதும் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தினத்தன்று நான் ஊரில் இருந்ததாகவும், விவசாய வேலை செய்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், அன்றைய தினம் நான் வழக்கமாக சிதம்பரத்திற்கு வேலைக்கு சென்றுவிட்டேன் என்றாலும் சரியல்ல. அன்றைய தினம் காலை சுமார் 7.00 மணிக்கு நான் வீட்டிலிருந்து புறப்பட்டு காலை 9.30 மணிக்கு சிதம்பரத்திலுள்ள எனது அலுவலகத்திற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/– G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.